



திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள் முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம், நல உதவிகள் வழங்கும் விழா ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் தலைமையில் ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன் ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்து கிராம மக்களுக்கு விளக்கி பேசி, 600 மகளிர்க்கு சேலைகள், பொது மக்களுக்கு அறுவை உணவு வழங்கினார். பொதுக்கூட்டத்தில் கேசவராஜகுப்பம் கிராமத்தைச் சார்ந்த 25க்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து விலகி வழக்கறிஞர் சீனிவாசன், திருமலை லோகநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். மேலும் கிராமத்து இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்.

### சி.ஜெ.சீனிவாசன் தலைமையில் திருமலை லோகநாதன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா - கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றி நல உதவிகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஜன. 08-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கேசவராஜகுப்பம் கிராமத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தி.மு.க. அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன் அனைவரையும் வரவேற்றனர்.

இக்கூட்டத்தில் திரு வள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்து கிராம மக்களுக்கு விளக்கி பேசினார்.

மேலும் நிகழ்ச்சியில் 600 மேற்பட்ட மகளிர்க்கு சேலைகள் மற்றும் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் கேசவராஜகுப்பம் கிராமத்தைச் சார்ந்த 25 க்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து விலகி ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் சீனிவாசன், ஒன்றிய அவைத் தலைவர் திருமலை லோகநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தார்கள் மேலும் கிராமத்து இளைஞர்களுக்கு விளையாட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியச் செயலாளர் பி.டி.சந்திரன், திருத்தணி வடக்கு ஒன்றிய செயலாளர் எ.எல்.விஜயகுமார், பள்ளிப்பட்டு பேரூர் செயலாளர் சி.ஜெ.செந்தில்குமார், பொaதட்டூர்பேட்டை டி.ஆர்.கே.பாபு, பள்ளிப்பட்டு பேரூராட்சி மன்ற தலைவர் எஸ்.மணிமேகலை, மாவட்ட பிரதிநிதிகள் சி.பி. முத்து, டி.செங்கய்யா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கொல்லாகுப்பம் ஜெ.தண்டபாணி, எம்.ஹரி, எ.கே.ரவி, ஜெ.சுபான், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஏ.கலீல், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் உ.சதீஷ், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என்.சந்திரபாபு, ஆர்.ராமன், ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் தண்டபாணி, கேசவராஜகுப்பம் ஊராட்சி நிர்வாகிகள் என். ஏழுமலை, டி.ஜெ.முருகேசன், ராஜேந்திரன், சுப்பிரமணி, விவேகானந்தன், எ.ஜி. ஏக்கம்பரம், எஸ்.மோகன்ராஜ், வெங்கடேசன், டி. ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் கேசவராஜகுப்பம் கிளை இளைஞரணி அமைப்பாளர் டி.எல்.தியாகராஜன் நன்றி உரையாற்றினார்.

### சென்னை பள்ளிகளுக்கிடையிலான 2025–26ஆம் கல்வியாண்டிற்கான

## விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கிப் பாராட்டினார்!

சென்னை, ஜன.8-

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நேற்று (07.01.2026) நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளுக்கிடையிலான 2025-26ஆம் கல்வியாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 206 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 417 சென்னை பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், சென்னை பள்ளிகளுக்கிடையிலான 2025-26ஆம் கல்வியாண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று (7.1.2026) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தொடங்கி நடைபெற்றது. இதில் சென்னை பள்ளி மாணவ, மாணவியரின் அணி வகுப்பு மரியாதை, விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடர் ஏற்றுதல், விளையாட்டு வீரர்கள் உறுதி மொழி ஏற்றல், மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பட்டது.

சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு 1500 மீ., 800 மீ., 600 மீ., 200 மீ., 100 மீ., ஓட்டப்பந்தயங்கள், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், 4x 100 மீ. தொடர் ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் பள்ளிகள் அளவிலும், மண்டல அளவிலும் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு இறுதி விளையாட்டுப் போட்டிகள் இன்று ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற 318 மாணவர்களுக்கும், மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற 48 மாணவர்களுக்கும் கேடயங்கள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் வழங்கிப் பாராட்டினார்.

சென்னை பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு முதல் பரிசாக 10 கிராம் வெள்ளிப் பதக்கம், இரண்டாம் பரிசாக 8 கிராம் வெள்ளிப் பதக்கம், மூன்றாம் பரிசாக 7 கிராம் வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டது.

இவ்விழாவில், மேயர் திருமதி ஆர்.பிரியா, இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலை வர் (கல்வி) த. விஸ்வநாதன், மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, கல்வி அலுவலர் திருமதி வசந்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், வெ.பரிமளம், உதவி கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### நா.மோ.முரளி ஏற்பாட்டில் — திராவிட பொங்கல் விழா!

## 132வது வட்டத்தில் கழகத்தினருக்குப் புத்தாடைகள்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன. 08-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் நாளை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் விழா

நாளை (9/1/2026 - வெள்ளி கிழமை) மாலை 6 மணியளவில் ஜெ.கருணாநிதி தலைமையில்,

எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு.சத்தியா ந.மோ முரளி ஆகியோர் முன்னிலையில் கழகத் தோழர்களுக்கு புத்தாடைகள் வழங்குபவர் மயிலை த. வேலு வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன், கே.ஏழுமலை, ரத்னா லோகேஸ்வரன், கார்த்திகா, பாஸ்கர்,

மற்றும் வட்டக் கழக ப குதி கழக மாவட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு ந.மோ முரளி செய்திருந்தார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்தில் (மண்டலம் 6ல்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக தற்காலிகமாகப் பணியாற்றி வந்த தூய்மைப் பணியாளர்கள் 29 பேர், தற்போது, திரு.வி.க.நகர் மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான ராம்கி நிறுவனத்தில் தூய்மைப் பணியாளர்களாக இணைந்து அவர்களுக்கான பணி ஆணை இந்நிறுவனத்தின் சார்பில் நேற்று (07.01.2026) வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வி.க.நகர் மண்டல அலுவலர் சொக்கலிங்கம், செயற்பொறியாளர்கள் சதீஷ், பழனி, பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் நல பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள், ராம்கி நிறுவனத்தின் அலுவலர்கள் பங்கேற்றனர்.


